**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 141/2025** |
| **Ranking of witness** | **:** | **PW3** |
| **Name** | **:** | **முருகன்** |
| **Father's Name** | **:** | **த/பெ ராமர்** |
| **Age** | **:** | **52** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04-03-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

**முதல் விசாரணை :**

நான் பி.எஸ். அக்ரகாரத்தில் குடியிருந்து, காண்ட்ராக்டர் தொழில் செய்து வருகிறேன். கடந்த 12.02.2024 அன்று மாலை 07.10 மணியளவில் அதகப்பாடியில் நான் இருந்தபோது, சிப்ஸ் கடை அருகே, தருமபுரி – பென்னாகரம் செல்லும் சாலையில் தனுஷ் என்பவர் இரு சக்கர வாகனத்தில் இண்டுரில் இருந்து தருமபுரி நோக்கி சென்றபோது, தருமபுரி பக்கமிருந்து எதிரே வெற்றி என்பவர் இருசக்கர வாகனத்தில் வந்து, தனுஷ் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். மோதியதில் தனுஷ் என்பவருக்கு தலையின் பின்பக்கம் காயம் ஏற்பட்டு, அவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். சிறிது நேரம் கழித்து, மருத்துவமனைக்கு நான் சென்று பார்த்தபோது சுயநினைவின்றி இருந்தார். பின்பு சிகிச்சை பலனின்றி தனுஷ் இறந்துவிட்டார். தனுஷ் என்பவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் வெற்றி என்பவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிதான் சம்பவத்தின்போது விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

விபத்து நடைபெற்றதாக கூறப்படும் இடமானது தருமபுரி – பென்னாகரம் செல்லும் பிரதான சாலை. விபத்து நடைபெற்றதாக கூறப்படும் இடத்திற்கும், நான் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே 4 கி.மீ. தொலைவு இருக்கும். விபத்து நடைபெற்றதாக கூறப்படும் நேரம் இரவு 07.15 என்றால் சரி. சாலையின் ஓரத்தில் மின் விளக்குகள் ஏதும் இல்லை என்றால் சரி. கிருஷ்ணா புட்ஸ் கடைக்கும் விபத்து நடைபெற்றதாக கூறப்படும் இடத்திற்கும் இடையே 150 அடி தொலைவு இருக்கும் என்றால் சரி. அந்த கடையின் முன்பாக புளிய மரம் ஒன்று உள்ளது என்றால் சரி. விபத்து நடைபெற்ற இடம், தருமபுரி – பென்னாகரம் சாலையின் இடது புறதில் நடைபெற்றது என்றால் சரி. எதிரி தருமபுரி – பென்னாகரம் நோக்கி சென்று கொண்டிருந்தார். வழக்கில் இறந்ததாக கூறப்படும் தனுஷ் என்பவர் பென்னாகரம் – தருமபுரி நோக்கி சென்றார் என்றால் சரி. தனுஷ் என் உறவினர் என்றால் சரியல்ல. நாங்கள் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். விபத்து ஏற்பட்டு தனுஷ் என்னிடம் கூறிய பிறகு சம்பவ இடம் பார்வையிட்டேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும், உண்மையில் நான் சம்பவத்தை நேரில் கண்ணுற்று

இருந்தால், விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் வாகனத்தின் பதிவு எண்ணை சொல்வேன் என்றால் சரியல்ல. விபத்தானது இருளில் நடைபெற்றதாலும், சாலையின் இருபுறத்திலும் மின்விளக்குகளும் இல்லாத காரணத்தினாலும், யாருடைய கவனக்குறைவால் நடைபெற்றது என்று தெரியாது என்றால் சரியல்ல. விபத்தினால் எதிரிக்கும் காயங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தில் இறந்ததாக கூறப்படும் தனுஷ் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றால் சரிதான் . எதிரி சாலை விதிகளை கடைபிடித்து, சாலையின் இடதுபுற ஓரம் சென்று வந்தார் என்றும், எதிரே வந்த தனுஷ்தான் சாலைவிதிகளை சரிவர பின்பற்றாமல், எதிரி மீது வாகனத்தை மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல, நானும், விபத்தில் இறந்த தனுஷ் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.03.04 16:50:44 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**

**சாட்சியின் கையொப்பம்.** **தருமபுரி.**